நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**
வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.139 / 2022**

வழக்கு சாட்சி- **அ.சா.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | சத்தியராஜ் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சிங்காரவேல் | : | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |
| கிராமம் | வடுகன் புதுப்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 35/2023 |

( 1வது எதிரி ஆஜர், 2 முதல் 6 வரை ஆஜர் இல்லை. எதிரிகள்தரப்பில் 317 குவிமுச பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

**நாள் : 20.12.2023**

**முதல் விசாரணை:**

நான் வடுகன் புதுப்பட்டியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது அம்மா, அப்பா ஆவார்கள். கடந்த 16.11.2018ஆம் தேதியன்று மதியம் 01.30 மணி அளவில் நான் என் வீட்டில் தூங்கி கொண்டிருந்தேன். என் அம்மா எங்கள் வீட்டிற்கு பின்புறம் விறகு பொறுக்கி கொண்டிருந்ததைபற்றி கேட்டு கொண்டிருந்தார். அப்போது எதிரி ஜெயச்சந்திரன் கட்டையால் என் அம்மாவின் தலையில் அடித்து காயம் ஏற்படுத்திவிட்டார். அதன்பிறகு என் அம்மாவை அழைத்துகொண்டு மெடிகலுக்கு சிகிச்சைக்காக சென்று விட்டோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் வெண்டயம்பட்டி ரோட்டில் உள்ள கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றீர்களா என்றால் இல்லை. எங்களது வீடு வடக்கு தெருவில் உள்ளது. எதிரியின் வீடு தெற்கு தெருவில் உள்ளது. நான் 10ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். தூங்குமூஞ்சி மரம் எங்களது இடத்தில் உள்ளதற்கான ஆவணங்களை கொடுத்துள்ளீர்களா என்றால், 2017ஆம் வருடம்

பூதலூரில் கொடுத்துள்ளோம். நான், எனது அம்மா, அப்பா, எனது தம்பி ஆகியோர்கள் எதிரிகளை தாக்கியதாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள்என்றால் சரிதான். தூங்குமூஞ்சி மரம் மழை புயலில் சில கிளைகள் கீழே விழுந்து கிடந்தது. சில கிளைகள் தொங்கி கொண்டிருந்தது.

3) தூங்குமூஞ்சி மரக்கிளைகள் விழுந்ததால்தான் எனது அம்மாவிற்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஜெயச்சந்திரன், வசந்தா ஆகியோர் கோயம்புத்தூரில் வசிக்கிறார்கள். தூங்குமூஞ்சி மரம் யார் பக்கம் உள்ளது என்று தஞ்சாவூர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு எங்களுக்கு எதிராக தீர்ப்பாகி உள்ளது என்றால் எங்களுக்கு தெரியாது. நான் தஞ்சாவூரில் வழக்கறிஞரை சந்தித்துள்ளேன். வழக்கு முடியவில்லை என்று வழக்கறிஞர் சொன்னார். 2வது எதிரி தங்கராஜ் வழக்கு போட்டதால்தான் அவர்மீது நாங்கள் பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது தங்கை ஜான்சியை எதிரியின் அண்ணனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

4) போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. நான் சொல்வதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளுக்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)